(ஆ) பேரவை நுழைவாயிலில் உறுப்பினர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்படுவதும் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதும் குறித்து.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் தொடங்கி 8 மாதங்கள் ஆகியும், நுழைவு வாயிலிலே உள்ள காவலர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் யார் என்று அடையாளம் தெரியாமல், தடுத்து நிறுத்துகின்ற அவல நிலை இருக்கிறது. எனவே, அதற்காக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அங்கி, அடையாள பாட்ஜு கொடுக்கின்ற திட்டம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு ஐடென்டிபிகேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. காவலர்கள் கேட்டால், அதைக் காட்டித் தான் ஆகவேண்டும். அதுதான் நல்லது. காவலர்களும் முதன்முதலாக வந்திருப்பவர்கள். தாங்களும் முதன் முறையாக வந்திருக்கிறீர்கள். அவர்களுக்குத் தங்களை அடையாளம் தெரியாமல் இருக்கலாம். இதைப் பெரும் குற்றமாகக் கருதக் கூடாது. ஐடென்டிபிகேஷன் கார்டைக் காட்டி உள்ளே வரலாம்.

திரு. ஏ. ரகுமான்கான் : நான் இன்பர்மேஷன் கேட்பது தப்பா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தினுடைய ஆணை பற்றிய குறிப்பு அறிக்கையின் பின்னாலே இருக்கிறது.

திரு. ஏ. ரகுமான்கான் : வேலை நீக்கம் செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன் கேட்கக் கூடாது என்று நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். எனவே, நான் அனுமதிப்பதற்கு இல்லை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், இந்த அறிக்கையின் பக்கம் 303லே, பிரச்னை எண் 7லே பாரா 3லே இதைப்பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் முழுவதும் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். முழுவதையும் படித்துவிட்டு, அதற்குப் பிறகு கேளுங்கள்.

திரு வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இதைக் குறித்து பக்கம் 303லே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பது குறித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் அமைச்சர் அவர்களும் சொன்னார்கள்.

1978 மார்ச் 1

திரு. ஏ. ரகுமான்கான் ; அமைச்சர்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்தப் பிரச்னையைப் பற்றி ஒவ்வொருவரும் தனித்தனியாக கேட்டுக் கொண்டிருக்க, அதற்கு நேரத்தை வீணுக்க விரும்பவில்லை. ஆகவே, இதை அனுமதிப்பதற்கு இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர், இந்த மன்றத்திற்கு வருகின்ற நேரத்தில் எல்லாம் பல்வேறு புத்தகங்கள் ஏடுகள் இம்மாதிரி வைக்கப்படுகின்றது. இப்படி ஒவ்வொன்றின் மீதும் இன்பர்மேஷன் கேட்பது முறையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நான் அனுமதிக்கவில்லை என்று சொல்லிவிட்ட பிறகு, இந்த பிரச்சினையை எழுப்ப வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, இதிலே ஒழுங்கு பிரச்னைக்கே இடமில்லை. ஏற்கனவே நான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேன்.

4. உரிமைப் பிரச்னைகள்.

(அ) 'குங்குமம்', 'முரசொலி'—பத்திரிகைகள் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னைகள் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பு.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதியன்று திரு. கே. கந்தசாமி அவர்கள் 'குங்குமம்' வார இதழ் மீதும், திரு. கே சமரசம் அவர்கள் 'முரசொலி' நாளிதழ் மீதும் கொண்டு வந்த உரிமைப் பிரச்னைகள் மீது, ஆசிரியர்களின் விளக்கங்களைக் கேட்டறிந்த பின் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

ஆசிரியர்களை விளக்கம் கேட்டதற்கு, 'குங்குமம்' ஆசிரியர் இவ்வாறு நேர்ந்ததற்காக மிகவும் வருந்துவதாகவும், இனி எச்சரிக்கையோடு இருந்து இம்மாதிரி நேரா வண்ணம் பார்த்துக் கொள்வதாகவும் உறுதி அளித்துள்ளார். எனவே அதை ஏற்று, இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'முரசொலி' ஆசிரியர், வெளியிட்டுள்ள கார்ட்டுன் ஒரு நகைச்சுவை சித்திரமே தவிர, இச்சட்ட மன்றத்தின எந்த உறுப்பினரையும் குறிக்கவில்லை என்றும், அம்மாதிரியான நோக்கம் வாசகர்களிடத்தில் தோன்றும் கருத்தில் கார்ட்டுன் போடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்தக் கார்ட்டுனில் எந்த அம்சமும் சட்டமன்ற நடவடிக்கையைக்